சிவகங்கையில் டிச.27ல்

விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை, டிச.24: சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் டிச.27ல் நடக்க உள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் டிச.27 காலை 10மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது.

கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டையூர் பேரூராட்சி
முக்கிய அறிவிப்பு

ந.க.எண்: 558/2024 **நாள்: 23.12.2024**

திரு.பல்ராம்சிங், என்பவரால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(CIVIL)324/2020-ல், 20.10.2023 மற்றும் 11.12.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ஆணைகளின்படி மனிதக்கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியை மேற்கொள்ளும் நபர்கள் (Manual Scavengers) எவரும் கண்டறியப்படவில்லை என தெரிய வருகிறது.

இதில் ஏதேனும் ஆட்சேபனையிருப்பின், மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம், 2013 பிரிவு எண்-11ன் படி தங்களது ஆட்சேபனைகளை 15 நாட்களுக்குள் "கோட்டையூர் பேரூராட்சி செயல் அலுவலர்" அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

வி.வெ.எண்: 179/2024/செ.ம.தொ.அ/
சிவகங்கை நாள்: 23.12.2024

செயல் அலுவலர்
கோட்டையூர் பேரூராட்சி

திருப்பத்தூர் பேரூராட்சி
முக்கிய அறிவிப்பு

ந.க.எண்: 209/2014/அ2 **நாள்: 23.12.2024**

திரு.பல்ராம்சிங், என்பவரால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(CIVIL)324/2020-ல், 20.10.2023 மற்றும் 11.12.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ஆணைகளின்படி மனிதக்கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியை மேற்கொள்ளும் நபர்கள் (Manual Scavengers) எவரும் கண்டறியப்படவில்லை என தெரிய வருகிறது.

இதில் ஏதேனும் ஆட்சேபனையிருப்பின், மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம், 2013 பிரிவு எண்-11ன் படி தங்களது ஆட்சேபனைகளை 15 நாட்களுக்குள் பேரூராட்சி செயல் அலுவலருக்கு எழுத்து மூலமாக தெரிவித்துக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

வி.வெ.எண்: 174/2024/செ.ம.தொ.அ/
சிவகங்கை நாள்: 23.12.2024

செயல் அலுவலர்
திருப்பத்தூர் பேரூராட்சி

நாட்டரசன்கோட்டை பேரூராட்சி
சிவகங்கை மாவட்டம்
முக்கிய அறிவிப்பு

ந.க.எண்: 047/2024/அ1 **நாள்: 23.12.2024**

திரு.பல்ராம்சிங், என்பவரால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(CIVIL)324/2020-ல், 20.10.2023 மற்றும் 11.12.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ஆணைகளின்படி மனிதக்கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியை மேற்கொள்ளும் நபர்களை (Manual Scavengers) கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் எவரும் கண்டறியப்படவில்லை என தெரிய வருகிறது.

இதில் ஏதேனும் ஆட்சேபனையிருப்பின், மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம், 2013 பிரிவு எண்-11ன் படி தங்களது ஆட்சேபனைகளை 15 நாட்களுக்குள் நாட்டரசன்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு எழுத்து மூலமாக தெரிவித்துக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

வி.வெ.எண்: 176/2024/செ.ம.தொ.அ/
சிவகங்கை நாள்: 23.12.2024

செயல் அலுவலர்
நாட்டரசன்கோட்டை பேரூராட்சி

மண்டபம் பேரூராட்சி
முக்கிய அறிவிப்பு

ந.க.எண்: 216/2024 **நாள்: 23.12.2024**

திரு.பல்ராம்சிங், என்பவரால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(CIVIL)324/2020-ல், 20.10.2023 மற்றும் 11.12.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ஆணைகளின்படி மனிதக்கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நபர்கள் (Manual Scavengers) கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் எவரும் கண்டறியப்படவில்லை என தெரிய வருகிறது.

இதில் ஏதேனும் ஆட்சேபனையிருப்பின், மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில்புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம், 2013 பிரிவு எண்-11ன் படி தங்களது ஆட்சேபனைகளை 15 நாட்களுக்குள் "பேரூராட்சி செயல் அலுவலருக்கு" எழுத்து மூலமாக தெரிவித்துக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

வெ.ஆ.எண்: 103/2024/செ.ம.தொ.அ/
இராமநாதபுரம் நாள்: 23.12.2024

செயல் அலுவலர்
மண்டபம் பேரூராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.

அறிவியல் இயக்கம் சார்பில்

பள்ளி ஆசிரியர்களுக்கு விருது

சிவகங்கை, டிச.24: சிவகங்கையில் உலக ஆசிரியர் தின விழாவையொட்டி தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் ஆசிரியர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கைக் கிளை சார்பில் உலக ஆசிரியர் தின விழா நடைபெற்றது. கிளைத் தலைவர் மணவாளன் தலைமை வகித்தார், மாவட்ட துணைத்தலைவர் காளிராசா முன்னிலை வகித்தார். கிளைச் செயலர் அனந்த கிருஷ்ணன் வரவேற்றார்.

மாவட்ட கவுரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் நோக்க உரையாற்றினார். தமிழ்ச்செம்மல் பகிரத நாச்சியப்பன், தேசிய நல்லாசிரியர் கண்ணப்பன் ஆகியோர் ஆசிரியர்களுக்கு விருது வழங்கினர். சிவகங்கை நகராட்சி கோட்டை மூலை தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் இந்திராகாந்தி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கூட்டுறவுபட்டி பட்டதாரி ஆசிரியை சாவித்திரி, தூய ஜோசப் மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் குழந்தை ஆரோக்கிய மேரி ஆகியோருக்கு சாவித்திரிபாய் புலே விருதும், விவேகானந்தா உயர்நிலைப் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் முரளிதரன், பாப்பாகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி உதவி ஆசிரியர் ராஜா ஆகியோருக்கு அப்துல் கலாம் விருதும் வழங்கப்பட்டது. காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவிய போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற அரு.நடேசன் செட்டியார் பள்ளி, கல்லல் முருகப்பா பள்ளி உள்ளிட்ட பள்ளி மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலர் ஆரோக்கிய சாமி, பொருளாளர் பிரபு, துளிர் இல்ல ஒருங்கிணைப்பாளர் அஸ்வின், துளிர் திறனறிவு தேர்வு ஒருங்கிணைப் பாளர் தமிழ்ச்செல்வம், கவிஞர் தமிழ்க்கனல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிளைப் பொருளாளர் ராஜசரவணன் நன்றி கூறினார்.

திருத்தளிநாதர் கோயிலில்

தேய்பிறை அஷ்டமி வழிபாடு

திருப்புத்தூர், டிச.24: திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயிலில் நேற்று தேய்பிறை அஷ்டமி விழாவை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் வழிபாடு நடைபெற்றது.

திருப்புத்தூர் சிவகாமி அம்பாள் சமேத திருத்தளிநாதர், யோகபைரவர் கோயிலில் நேற்று தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு யோகபைரவருக்கு பால், சந்தனம், மஞ்சள், தயிர், பன்னீர், இளநீர், பஞ்சாமிர்தம், விபூதி உள்ளிட்ட 16 விதமான திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது.

பின்னர் யோகபைரவர் விபூதி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு பைரவர் சன்னதி முன்பு வெண் பூசணி, தேங்காய், எலுமிச்சம் பழம், மண் அகல் விளக்கு ஆகிவற்றில் நெய் தீபம் ஏற்றி தங்களது நேர்த்திக் கடனை செலுத்தியும், வேண்டுதலையும் வைத்து வழிபாடு செய்தனர். இதில் திருப்புத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

பண்ணைக்குட்டைகள் அமைக்க வலியுறுத்தல்

சிவகங்கை, டிச.24: சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் சார்பில் தெரிவித்துள்ளதாவது, சிவகங்கை மாவட்டத்தில் மழை நீரை சேமிப்பதற்கு ஏதுவாக, விவசாயிகளின் பட்டா நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. புஞ்சை நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதால் மழைநீர் சேகரிக்கப்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் உயர்கிறது. இதனால் அருகில் உள்ள கிணறுகளில் நீருற்று அதிகரித்து, கிணற்றினை வைத்து சாகுபடி செய்யும் நிலப்பரப்பு அதிகமாகிறது.விவசாயம் செய்யாத தரிசு நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைப்பதால், தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாறும் வாய்ப்பு ஏற்படுகிறது. பாசனவசதி இல்லாத இடங்களிலும், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களிலும் பண்ணைக்குட்டையில் சேகரிக்கப்படும் மழை நீரை நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம், சாகுபடி செய்யப்படும் பயிருக்கு நீர் பாய்ச்சுவதால் பயிர் கருகுவது தவிர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்படுகிறது. பண்ணைக் குட்டைகளில் கட்லா, ரோகு, கெண்டை போன்ற உயர்வகை மீன்கள் வளர்க்கப்படுவதால் உபரி வருமானம் கிடைக்கிறது.எனவே பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும்.

முதல்வரின் திட்டங்களை

சமூக வலைதளங்கள் மூலம் மக்களிடம் சேர்க்க வேண்டும்

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு

காரைக்குடி, டிச.24: காரைக்குடியில் திமுக இளைஞரணி சார்பில் பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு சமூக வலைதளப்பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் வரவேற்றார்.

▶ காரைக்குடியில் திமுக இளைஞரணி சார்பில் நடந்த வலைதளபயிற்சி முகாமில், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரையாற்றினார். மாநில துணைச்செயலாளர் ராஜா முன்னிலை வகித்தார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகித்துபேசுகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் இதுபோன்ற பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

திமுகவில் உள்ள பல்வேறு அணிகளில் இளைஞரணிக்கு என தனியாக முக்கியத்துவம் உள்ளது. உங்களை நம்பி மகத்தான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. உங்களின் பொறுப்புகளை உணர்ந்து சிறப்பாக செயல்பட வேண்டும். இளைஞரணி பொறுப்பில் இருந்தவர்கள் இன்று பல்வேறு முக்கிய பொறுப்புகளுக்கு வந்துள்ளார்கள்.

இதில் சிறப்பாக பணியை செய்யும் போது உங்களுக்கு பொறுப்புகள் தேடிவரும் காலம் வரும். தற்போது சமூக வலைதளங்களே மிகப்பெரிய பிரசார யுக்தியாக உள்ளது. எனவே முதல்வரின் எண்ணற்ற திட்டங்களை சமூக வலைதள ங்கள் மூலம் மக்களிடம் சேர்க்க வேண்டும் என்றார்.

மாவட்டதுணைச்செயலாளர் சேங்கைமாறன், தொகுதி பொறுப்பாளர் முருகவேல், முன்னாள் எம்எல்ஏ சுபதுரைராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சேதுபதிராஜா, பொற்கோ, பரணி கிட்டு, மதிவாணன், கிங் கார்த்தி, முகமதுமாக தீர் வாழ்த்துரை வழங்கினர்.

இணைதள பயிற்சியாளர்கள் டான்அசோக், இளமாறன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். மாநகராட்சி துணை மேயர் குணசேகரன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், குன்றக்குடி சுப்பிரமணியன், சின்னத்துரை, பூபாலசிங்கம், கண்ணங்குடி ரவி, தேவகோட்டை நகர செயலாளர் பாலா, புதுவயல் பேரூராட்சி செயலாளர் பகருதீன் அலிபாய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீசாரதா நிகேதன் மகளிர் கல்லூரியில்

அன்னையார் ஜெயந்தி விழா

▶ காரைக்குடி அருகே அமராவதிபுதூர் ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கலைக்கல்லூரியில், அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 172வது அன்னையார் ஜெயந்தியை முன்னிட்டு ரத ஊர்வலம் நடந்தது.

காரைக்குடி, டிச.24: காரைக்குடி அருகே அமராவதிபுதூர் ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கலைக் கல்லூரியில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 172வது அன்னையார் ஜெயந்தி விழா, கல்லூரி நிறுவனர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்த மகராஜ் அருளாசியுடன் கொண்டாடப்பட்டது. கல்லூரி செயலாளர் யதீஸ்வரி சாரதேஸ்வரி பிரியா அம்பா, யதீஸ்வரி ராமகிருஷ்ண பிரியா அம்பா ஆகியோர் வழிபாடுகளை நடத்தினர். ஸ்ரீமத் மாத்ரு சேவானந்த சுவாமிஜி பஜனை வழிபாடுகளை நடத்தி துவக்கி வைத்தார். அன்னையாரின் ரத ஊர்வலம் கல்லூரியில் புறப்பட்டு அமராவதி புதூர் சிவன் கோவில் வரை சென்றது. பின்னர் அன்னையாரின் கோவிலில் வழிபாடு நடந்தது. கல்லூரி முதல்வர் முனைவர் சிவசங்கரி ரம்யா, இயக்குனர் மீனலோச்சனி மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். சிறப்பு வழிபாடு மற்றும் மங்கள ஆரத்தி நடந்தது.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) இன் கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 30 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எல்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' மற்றும் 'எவ்வித உத்தரவாதமும் இல்லாத'** அடிப்படையில் 28–01–2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 28–01–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 27–01–2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்;

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	17.12.2024 தேதிப்படி நிலுவைத் தொகை
2.	TCHHL04800001001 93223 & TCHIN048 000010019 4136	திரு.சக்கரை முகமது & திருமதி.நித்யாபானு S	கடன் கணக்கு எண். TCHHL0480000100193223 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 31,12,110, மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0480000100194136 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ.1,33,903/–, ஆக மொத்தம் ரூ.32,46,013/– செலுத்த வேண்டியதாகும். ------- 13–02–2024	ரூ. 49,02,000/– (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து இரண்டாயிரம் மட்டும்)	ரூ. 4,90,200/– (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து இருநூறு மட்டும்)	கையக	ஒப்பந்த எண் TCHHL0480000100193223 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.35,23,916/– மற்றும் ஒப்பந்த எண் TCHIN0480000100194136 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.1,81,230/– மொத்தம் ரூ. 37,05,146/–

அசையா சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதி நிலம் மற்றும் கட்டிடம், கதவு எண்.43/138 கொண்டது, அளவீடு 2067 + 792 =2859 ச.அடி அமைவிடம்: சிவகங்கை டவுன், அடங்கியுள்ள ச.எண்.T.S.No.60/2, வார்டு–C, பிளாக்–18, கார்கன்பாக்கம் கிழக்குத் தெரு, சிவகங்கை டவுன், சிவகங்கை பதிவு மாவட்டம், சிவகங்கை இணை–II சா.ப.அ. எல்லையில் அமைந்துள்ளது. **எல்லைகள்:–** வீரமுத்து மற்றும் காலி மனை, **கிழக்கு –** மேற்கு பொதுப்பாதைக்கு வடக்கு, கே.ஆண்டி & மற்றவர்களின் வீடு மற்றும் காலி மனைக்கு தெற்கு, தெற்கு வடக்கு கார்கன்பாக்கம் கிழக்குத் தெரு சாலை மற்றும் தெற்கு வடக்கு 28 ½ அடி கிழக்கு மேற்கு பொதுப்பாதை இடதுக்கு கிழக்கு, மருதுபாண்டியன் & மற்றவர்களின் நிலத்துக்கு மேற்கு. அளவீடு:– **இனம்–1:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கத்தில் 56.3 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கத்தில் 56.3 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கத்தில் 33 அடி, வடக்கு தெற்காக மேற்குப் பக்கத்தில் 40.6 அடி, 2067 அடி அளவு; அளவீடு:– **இனம்–2:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கத்தில் 28 ½ அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கத்தில் 16 ¾ அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கத்தில் 34 ½ அடி, வடக்கு தெற்காக மேற்குப் பக்கத்தில் 35 ½ அடி, 792 ச.அடி அளவு, அளவீடு 2067+792=2859 ச.அடி.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப் புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச்சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்.

குறிப்பு: மின்–ஏலம் ஆனது I http://bankauctions.in/ **இணைய முகப்பு மூலம் 28–01–2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.**

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்கமாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** அசையாச் சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது. **3.** ஏலம் உயர்த்தும் தொகைரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும். **4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் **"டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்."** பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறை என தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானதுஆகும். **6.** பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல் / நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானதுஆகும். **7. முன் அனுமதியின் பேரில் 17–01–2025 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாராராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத் தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும் / தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டுவிட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோருரிமைகளையும் இழப்பார். **11.** சொத்துக்கு உட்பட்ட, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்துவரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12.** அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள், ஒருங்கிணைப்பாளர் வழியாக, சேவை வழங்குநர், **M/s. 4 குளோசர், பிளாக் எண்.605A, 6வது தளம், மைத்திரிவனம் வணிக வளாகம், அமீர்பேட்டை, ஹைதராபாத்–500038 மின்னஞ்சல்:info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com. அதிகாரப்பூர்வ அதிகாரி, கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் 9999078669–க்கு** அனுப்பலாம். **13.**உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத்தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாராரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடாஆனதுஉரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில்செலுத்தப்படவேண்டும். மேலும் சலான் நகல் பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். **14.** மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந